REGD. No. M. 6311 ✦ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✦ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: தை 23உ சனி (5—2—55) ★ ★ வெளியீடு: தை 24உ ஞாயிறு (6—2—55) [இதழ் 201

மாணவிகளிடம் ஒழுங்கு தவறி நடந்துகொள்ளும் இளைஞர்கள்

போலீஸ் காவலில் 12 நபர்கள்!

அலகாபாத் நகரில் கடந்த ஒரு வார காலமாக, ஒழுங்குமுறை தவறி நடப்பவர்களை போலீசார் கைது செய்துவருகின்றனர். இதுவரை 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனராம்.

இன்று, உள்ளூரில் உள்ள கல்லூரியைச் சேர்ந்த 5 மாணவர்கள் உட்பட 12 இளைஞர்களை போலீசார் கைது செய்திருக்கின்றனராம். பெண்களின் கல்வி நிறுவனங்களைச் சுற்றி இந்த விரும்பத்தகாத இளைஞர்கள் வட்டமிடுவதாகவும், பெண்களிடம் இவர்கள் ஒழுங்கு தவறி நடப்பதாகவும் போலீசில் புகார் செய்யப்பட்டது.

ஆசியாவில் 'சோஷலிசம்' படும் பாடு!

பண்டிதர் பாணியில் சிலோன் பிரதமர்!

நேருவோ 'சோஷலிச மாதிரியான ஏற்பாடு' என்கிறார்!

ஜான் கொத்தலாவலையோ 'வன்மையுள்ள சோஷலிசம்' என்கிறார்!

லண்டன், பிப். 6—

"வன்மையுள்ள சோஷலிசத்தில் எனக்கு எப்பொழுதும் பற்றுண்டு. வாழ்க்கையின் சிறந்த பகுதிகள் அனைத்தும் சிலருடைய ஆதிக்கத்திற்குட்பட்டதாக இருத்தல் கூடாது என்பதுதான், நான் அவ்வாறு கூறியுள்ளதின் பொருளாகும். சீரான வாழ்வின் நலன்களைப் பெறுவதில் செல்வந்தர்களுக்குள்ளது போன்றே ஏழைகளுக்கும் உரிமை உண்டு."

—இவ்வாறு, சிலோன் சுதந்திரத்தின் ஏழாண்டு நிறைவைக் கொண்டாடிய சர் ஜான் கொத்தலாவலை குறிப்பிட்டுள்ளார்.

"சென்ற பெரும் போரில் சீரழிந்துபோன ஜப்பான் தனது நாட்டுப் பற்றாலும் உறுதிப்பாட்டாலும் மீண்டும் தலை நிமிர்ந்துள்ளதை, சிலோனும் பின்பற்ற வேண்டும்," என்றும் அவர் கூறியுள்ளார்.

வங்காளத்துடன் எங்களை சேர்க்காதே

கிஷன்கஞ்ச் மக்கள் ஆர்ப்பாட்டம்

கிஷன்கஞ்ச், பிப். 3—

மாநில புனரமைப்புக் குழு அங்கத்தினர்களான பண்டிதகுன்ஸ்ரு, சர்தார் பணிக்கர் ஆகியோர் இங்கு வந்து சேர்ந்தபோது, கிஷன்கஞ்சின் எந்த ஒரு பகுதியையும் மேற்கு வங்காள மாநிலத்துடன் சேர்க்கக் கூடாதென்று கோரி ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

விசாரணை நடைபெற்றபோது, கிஷன்கஞ்ச் மக்கள் வங்க மொழி பேசுவதில்லை யென்றும், இந்தி, உருது ஆகிய மொழியே பேசுகிறார்கள் என்றும் பலர் சாட்சியமளித்தனராம்.

குடியரசாகும் பாகிஸ்தான்

லண்டன், பிப். 4—

பாகிஸ்தான் ஒரு குடியரசு நாடாக உருவான பின்பு கூட காமன்வெல்த்தில் சம அந்தஸ்து பெற்ற பூரண அங்கத்தினர் நாடாக இருக்கலாமென்று காமன்வெல்த் பிரதமர்கள் ஏகமனதாக முடிவு செய்திருப்பதாயும், இந்த முடிவு அதிகாரபூர்வமாகவே அறிவிக்கப்பட்டு விட்டதாயும் தெரிகிறது.

புதிய அரசியல் சட்டப்படி பாகிஸ்தான் குடியரசாக மாறப் போகிறதென்று பாகிஸ்தான் சர்க்கார் இதர காமன்வெல்த் நாடுகளுக்கு அறிவித்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டதாம்.

நம்பிக்கையில்லை!

டாக்கா, பிப். 4—

கிழக்கு வங்க ஐக்கிய முன்னணித் தலைவர் ஏ.கே. பஸ்லுல் ஹக் மீது வரும் 17-ந் தேதியன்று கூடவிருக்கும் கட்சிக் கூட்டத்தின் போது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படும் என்று ஷேக்முஜிபிர் ரஹ்மான் குறிப்பிட்டிருக்கிறார்.

இவர், ஹக் மந்திரி சபையில் மந்திரியாயிருந்தவர்; அவாமி முஸ்லிம் லீகின் பொதுச்செயலாளர்; ஐக்கிய முன்னணியில் உள்ள தனிப் பெரும் கட்சி, அவாமி லீக் தான்.

ஆறு லட்சம் பேர் கொண்ட வேலை தேடும் பட்டாளம்!

வேலை தேடித்தரும் நிறுவனங்கள் கூறும் தகவல்

புதுடில்லி, பிப். 5—

ஆறு லட்சத்திற்கும் அதிகமான பேர்கள், இதுவரை இல்லாத அளவில், கடந்த டிசம்பர் இறுதியில், இந்தியாவின் பல பாகங்களிலுமுள்ள வேலை தேடித்தரும் நிறுவனங்களில் பெயர்களைப் பதிவு செய்துள்ளனராம்.

டிசம்பரில் 6,09,780 என்றிருந்த எண்ணிக்கை நவம்பர் இறுதியில் இருந்ததைக் காட்டிலும் 26,566 அதிகமாக உள்ளதாம்.

சென்னை, பம்பாய், மேற்கு வங்கம், பீகார் ஆகிய மாநிலங்களில் தான், இதுவரை இல்லாத அளவு வேலைகோரி மனுச் செய்துள்ளோர் தொகை அதிகரித்துள்ளதாம்.

ஆனால், வேலைக்கு ஆள்வேண்டும் என்று இந்த நிறுவனங்களுக்கு வந்த கோரிக்கைகள் நவம்பரில் 23,097 ஆக இருந்தது டிசம்பரில் 21,076 ஆகக் குறைந்து விட்டதாம்.

உருக்குத் தொழிற்சாலைக்காக!

48 கிராமங்களுக்கு ம.பி.அரசாங்க அறிவிப்பு

இந்தியாவின் இரண்டாவது உருக்குத் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்குத் தேவைப்படும் நிலத்திற்காக துர்க் மாவட்டத்தில் உள்ள 48 கிராமங்களுக்கு மத்திய பிரதேச அரசாங்கம் அறிக்கை கொடுத்திருக்கிறது.

மேற்படி நிலங்கள் ஒரு பொது காரியத்திற்காக, அதாவது ஒரு உருக்கு இரும்புத் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்காக தேவைப்படுகிறது என அரசாங்க அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

துர்க் மாவட்டத்தில் இருக்கும் பாய்லியில் ரஷ்ய உதவியுடன், 10 லட்சம் டன் இரும்பு உருக்குத் தொழிற்சாலை நிறுவப்பட இருப்பது ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுள்ளது.

குழந்தை வளர்ப்பு யார் பொறுப்பு?

தாய்க்கு மட்டுமல்ல; அதில் தந்தைக்கும் சம பங்குண்டு!

பெண்கள் மாநாட்டினர் கண்டிப்பு

பாஸ்டாக், பிப்- 3—

"உயர்ந்த அரசாங்க அலுவல்களில் ஆண்களைப்போல் பெண்களும் பங்கு பெறுவதற்கு, ஆண்களுக்கு எதிராக பெண்களைப் பொறுத்தவரையில், குழந்தைகள் ஒரு தகுதித் தடையாக இருக்கவில்லை."

"குழந்தைகளைக் கண்காணிப்பது பெண்கள் மீது மட்டுமே சுமந்துள்ள ஒரு பொறுப்பு அல்ல. அதில் ஆண்களுக்கும் சம பொறுப்பு இருக்கிறது."

—இப்படி கண்டிப்பாகக் கூறி இருக்கின்றனர், அகில இந்திய பெண்கள் மாநாட்டில் கூடிய ஆங்கிலக் கல்வி கற்ற வீராங்கனைகள்.

"திருமணத்திற்குப் பிறகு அரசாங்கப் பணி புரிந்துவரும் பெண்கள் 'திறமையற்றவர்கள்' என்பதைக் காட்டிக் கொண்டுள்ளனர் எனப் பெண்கள் மீது வீசப்படும் குற்றச்சாட்டானது 'அநீதி'யாகும் என்றும், மணமான ஆண்களும் இக்குற்றச்சாட்டிலிருந்து தப்புவதாக இல்லை என்றும் ஒரு அம்மையார் குறிப்பிட்டார்.

அரசாங்கப் பணியிலிருந்து விலக்கப்படுபவர் எண்ணிக்கையும், கூறப்படும் குற்றச்சாட்டுகளின் எண்ணிக்கையும், பெண்களைவிட ஆண்கள் விஷயத்தில் கூடுதலாக இருக்கும் ஒன்றே போதுமானது, மேற்கூறிய உண்மையை மெய்ப்பிப்பதற்கு என்றும் அவ்வம்மையார் அறிவித்தார்.

கண்ணதாசன் தந்தையார் மறைவு

'தென்றல்' ஆசிரியர் தோழர் கண்ணதாசன் அவர்களது தந்தையார் சாத்தப்பச் செட்டியார் அவர்கள் 4—2—55ல் சிறுகூடல்பட்டியிலுள்ள தமது இல்லத்தில் இயற்கை எய்தினார் என்ற செய்திகேட்டு வருந்துகிறோம்.

தன்னையீந்த தந்தையை இழந்து வாடும் தோழர் கண்ணதாசன் அவர்கட்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

(ஆ—ர்.)

டாக்டர் அ. சிதம்பரநாதருக்கு வழியனுப்பு - வாழ்த்து விழா

ஜனவரி திங்கள் 22-ந் தேதி காலை 10 மணியளவில் அண்ணாமலை நகர் பட்டமளிப்பு விழா மண்டபத்தில், லண்டன் சென்ற தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் அ. சிதம்பரனாரைப் பாராட்டி ஒரு வழியனுப்பு, வாழ்த்து விழா நடைபெற்றது.

விழாவிற்குப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அ. இராமநாதன் தலைமை வகித்தார்; வழியனுப்பு வாழ்த்திதழை தோழர் சி. வீரமணி வாசித்தளித்தார்; தமிழ் இலக்கியக் கழக வாழ்த்துப்பாவை திருவாட்டி விசயகுமாரி பாடினார்; பல மன்றங்கள் சார்பில் மாலைகள் சூட்டப் பெற்றன.

தலைவர் தமது முன்னுரையில், டாக்டர் சிதம்பரனாரின் லண்டன் செலவால் பல்கலைக் கழகத்திற்குப் பெரும் பயன் உண்டு என்று குறிப்பிட்டார்.

பின்னர் தோழர்கள் இரா. பொன்னுராசு, இரா. மாணிக்கம், ப. பூவராகன், கி. வீரமணி, க. முத்தையன் ஆகியோர் டாக்டர் சிதம்பரனாரின் பணி குறித்தும், அவரது ஆற்றல் குறித்தும், அவர்தம் மேலை நாட்டுச் செலவால் தமிழுக்

(4-ம் பக்கம் பார்க்க)

திரு-கொச்சி மலையாளி பார்ப்பனர்களுக்கு ஒரு சட்டம்

சலுகைகளை ஒழிக்க புதிய மசோதா

திருவனந்தபுரம், பிப். 5—

பிப்ரவரி 3-ந் தேதியன்று நடைபெற்ற திரு-கொச்சி சட்ட சபையில், அரசாங்க சார்பற்ற நான்கு மசோதாக்கள் பொறுக்குக் குழுவிற்கு, விவாதம் எதுவுமின்றி அனுப்பப்பட்டுள்ளன. நெல்விலை நிர்ணயம் கைத் தொழிலாளர் காப்பு, கடன் நிவாரணம், மலையாள பார்ப்பனர் முதலிய துறைகளுக்கான நான்கு மசோதாக்கள் கொண்டுவரப்பட்டன.

மலபாரில் உள்ளது போன்ற திரு-கொச்சி மலையாள பார்ப்பனர்களனைவருக்கும் பொதுவான ஒரு ஏற்பாடு செய்ய, புதிய மசோதா ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது இம்மசோதாவில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகள் அனைத்தும் மக்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 5—2—1955 சனி

விவேக சிந்தாமணி!

ஆணும்—பெண்ணும் சரி நிகர் சமமாக வாழ வேண்டும்; அதற்கான வாய்ப்பிருக்க வேண்டும் எனக் கூறப்படும் காலம் இது. உடற்கூறு நீங்கலாக, மற்ற உள்ளப்போக்கு, கல்வித் திறம், அறிவாற்றல் ஆகிய அனைத்திலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் அணுவளவாவது வேற்றுமை இருக்கிறது எனக் கூறிட எவ்விதக் காரணமும் கிடையாது. உடலமைப்பில் வேறுபாடு இருக்கும் காரணத்தினாலேயே, பெண்களைவிட ஆண்கள் பலசாலிகள் என உறுதியாகக் கூறுவதற்குமில்லை.

ஆண்களுக்கும்—பெண்களுக்கும் இடையே இவ்வளவு ஒற்றுமைகள் இருந்தபோதிலும்கூட, தொன்றுதொட்டு ஏற்பட்டு ஆழ்வேர் விட்டு வளர்ந்து வந்திருக்கும் 'ஆணுக்குப் பெண் அடிமை' என்ற வேதனை தரும் விபரீத உணர்வு, அறவே பெண்கள் சமுதாயத்தைவிட்டு நீங்கிவிட்டது என எவராலும் கொள்ள முடியாது. அதேபோன்று, 'நம்மிலும் பெண் தாழ்ந்தவள்—அவள் நமது அடிமை—கூலி — எடுபிடி — ஏவலாளி' என்ற கெடுநினைப்புகள், இப்பொழுதும் பெரும்பான்மையான ஆண்களை விட்டுத் தொலைந்துவிட்டது எனக் கொள்வதற்குமில்லை.

தாங்கள் ஆண்களுக்கு அடிமை எனக் கொண்டிருக்கும் தாழ்வுணர்விலிருந்தும் பெண்கள் விடுபட்டாக வேண்டும்; தாங்கள்தான் பெண் குலத்தின் எஜமானர்கள் என ஆண்கள் கொண்டிருக்கும் உயர் உணர்வும் அவர்களை விட்டுத் தொலைந்தாக வேண்டும். தாழ்வு-உயர்வு உணர்வுகளை விட்டொழித்து விளங்கும் ஆண்-பெண்களால்தான், புதிய மனித சமுதாயத்தை உருவாக்க முடியும். அதற்கான வகையில் ஊக்கமூட்டும் ஏற்பாடு எதுவானாலும் வரவேற்கத்தகுந்ததேயாகும். கல்விப் பயிற்சியும் இத்தகு சூழ்நிலையை ஏற்படுத்தும் இயல்புடையதாக இருத்தல் வேண்டும்.

தாருகாவனத்து ஆரிய ரிஷி பத்தினிகள் கதையும், மும்மூர்த்திகளின் மனைவியர் வரலாறும், அவதார புருஷர்களின் பத்தினிமார் செய்தியும், நாம் காண விரும்பும் புதிய மனித சமுதாயத்திற்குத் தேவைப்படும் மாதர்மணிகளை ஒருக்காலும் தோற்றுவித்தற்கு உதவாது. மாதர் குலத்தில் இன்று புகுந்துள்ள அலங்கோலம், அப்புனிதக் கதைகளை அறிந்ததால் உருவான உடனடி விளைவேயாகும். எனவே, கேடுதந்த அப்பழங் கதையையோ, மேலும் மேலும் கட்டியழுதால்தான் புதிய மாதர் குலம் தோன்றுவது எதிர்பார்க்க முடியும் எனக் கருதுவதற்குத் துளியும் இடமில்லை.

சீரழிந்து கிடக்கும் இன்றைய சமுதாயத்திற்கு, நாம் ஆக்க எண்ணிஇருக்கும் ஆண்-பெண் வேற்றுமையற்ற புதிய மனித சமுதாயத்திற்குள் இருக்கும் தொலைவு, நீண்டதோர் பயணம் கொண்டதாகும். அப்பயணத்தில் விலக்க முடியாத இடர் பல உண்டு. வைதீகம் முட்டுக்கட்டை போடும்; புராண இதிகாசங்கள் தடுப்புச் சுவர் எழுப்பும். ரௌரவாதி நரகம் சம்பவித்திடும் என புரோகிதன் மிரட்டுவான்; நீசனுவாய் என ஆசாரம் அச்சுறுத்தும்; ஜாதிக் கட்டுப்பாடு என சுற்றத்தார் கொக்கரிப்பர்; உலகம் பழிக்குமென பெற்றோர் பெருமூச்செறிவர்;—இவ்வளவு தடைகளையும் தூளாக்கி முன்னேறிச் சென்ற பிறகுதான்—இன்றுள்ளதற்கு முற்றிலும் மாறுபட்ட புதிய சமுதாயம் நமை முகங்காட்டும்.

மலைப்பளிக்கக்கூடியதுதான்—திகைப்பை மூட்டக்கூடியதுதான் — மூச்சைத் திணற வைக்கக்கூடியதுதான்—ஆனால்,கண்டிப்பாக செய்து முடிக்க வேண்டியது—முயற்சி வீண்போகாது என்ற திட நம்பிக்கையுடன் தொடரக்கூடிய பயணம்.

புராணப் படிப்பு, வைதிக நம்பிக்கை, பழமைப் பிடிப்பு அவ்வளவு வன்மை கொண்டிருப்பதா என்பர், தங்களை மட்டுமே விஞ்ஞான அரசியல் வாதிகளெனப் பட்டம் சூட்டிக்கொண்டுள்ள மாபெரும் புரட்சி வீரர்கள். அவர்கள் அறியார், விலங்குணர்விலும் பலவகையிலும் மக்கள் மாறுபட்டிருப்பவர் என்பதை!

சில நாட்களுக்கு முன்பு ஜோத்பூரிலிருந்து ஒரு திடுக்கிடும் செய்தி கிடைத்தது.

கணவனை இழந்த பெண் ஒருத்தி, கணவன் உடலைக் கொளுத்த மூட்டிய செந்தீயில் தானும் விழுந்து கருகினாள் எனும் கொடுஞ் சம்பவம், ஜோத்பூரில் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அந்தத் தற்கொலைக்கு அப்பெண்ணின் சுற்றத்தாரும், சில அரசாங்க அதிகாரிகளும் உடந்தையாக இருந்தனர் என அறிவிக்கப்பட்டு, அவர்கள்மீது வழக்கும் தொடரப்பட்டுள்ளது எனவும் பின்னர் செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது.

அதுவுமன்றி, அதே பகுதியில், அதே போன்று, மற்றொரு இளம் பெண்ணும் தற்கொலை செய்துகொள்ள முயற்சித்ததாகவும், அவள் தடுக்கப்பட்டு, அவள்மீது வழக்குத் தொடரப்பட்டிருப்பதாகவும் வேறு ஒரு செய்தியும் வெளியிடப்பட்டிருந்தது.

எரியும் நெருப்பில் விழுந்து தற்கொலை செய்து கொள்ளும் நினைப்பையும், துணிவையும் அப்பெண்களுக்கு ஊட்டியது எது? அப்பெண்களின் மூளையில் படிந்துள்ள பழங்காலக் குப்பைக் கோட்பாடுதான் அவர்களை அக்கதிக்கு ஆளாக்கத் தூண்டியது எனக்கொள்ளாது, வேறு எப்படி கொள்ளுவது? இத்தகைய பழைமைப் பிடிப்பில் இருக்கும் பெண்களுக்கு, சட்டப்படி எத்தகைய உரிமை வழங்கப்பட்டிருந்துதான் யாருக்கு என்ன இலாபம்?

பழமைப் பிடியிலிருந்து பெரும்பான்மையான மக்களை மீட்க, சிறந்த பகுத்தறிவுப் போதனை தேவை; அதுவும் இடையறாது தீவிரமாகச் செய்யப்பட்டே வர வேண்டும். அப்போதனையில்தான், மங்கையர் மறுமலர்ச்சி மறைந்திருக்கிறது.

மேற்படி, பெண்களின் சோகச் செய்தியை, இராஜாராம் மோகன்ராய் கேட்டிருந்தால், அவர் தம் கல்லறையிலிருந்தே இரத்தக் கண்ணீர் சொரிந்திருப்பார். 'என் முயற்சிக்கு ஒரு நூற்றாண்டு காலத்துக்கு அதிகமான பிறகுகூடவா முழு வெற்றி ஏற்படாமல் இருக்கிறது? பழைமையின் பிடிப்புதான் என்னே! என்னே!' என்று ஆச்சரியமும் அதிர்ச்சியும் கலந்த குரலில் கேட்டிருக்கும் அக் கல்லறை!

பழைமைப் பிடியைத் தூள் தூளாக்கும் வலிமை பகுத்தறிவிற்கு உண்டு; புத்தறிவு போதனை என்றும் வெற்றி பெறும் என்ற உண்மையை வலியுறுத்துவது போன்று, அகமதாபாத் நகரிலிருந்து மற்றொரு சேதி தரப்பட்டிருக்கிறது. அதாவது, 46 வயதுடைய ஒரு ஆண் மகனுக்கு, 13 வயதே நிரம்பப் பெற்ற தனது இளம் பெண்ணை மணஞ் செய்து கொடுக்க, பெண்ணின் பெற்றோர் தீர்மானித்துவிட்டனர். மணம் நடைபெறும் நாளுக்கு முன் தினம், மணப்பெண் மறைந்தாள். தற்கொலை செய்துகொள்ளவில்லை—எப்படியாவது தப்பிப் பிழைத்துக் கொள்ளலாமென தலைமறைந்துவிடவில்லை அப்பெண். உள்ளூரில் இருந்த 'மாதர் நல விடுதி' ஒன்றில் தஞ்சம் புகுந்தாள். அவ்விடுதி நிர்வாகியின் துணையுடன், நீதிபதியிடம் தனது பெற்றோர்களின் பிடிவாதத்தைக் கூறி, தனது விருப்பமின்மையை விளக்கி, இளமணத் 'தடை சட்டத்தின் கீழ் தன் மணத்தைத் தடுக்க, நீதிபதியின் கட்டளையைப் பெற்றுவிட்டாள்.

மணம் நிறுத்தப்பட்டது; மணமகன் வெட்கினான்; பெண்ணின் பெற்றோர் துக்கித்தனர்.

பெற்றோரின் துன்பம்—கண்ணீர் இப்பொழுது மட்டுந்தான்! ஆனால் சிறுமியின் துக்கமோ, அவள் சாகும் மட்டும் அவளை நிழல்போல் தொடர்ந்து இருக்கக்கூடியது!

வேறு ஒரு பெண்ணால் இருந்தால், தற்கொலை செய்து கொண்டு இருப்பாள்! வேறு எங்காவது ஓடிவிட்டிருப்பாள்!

ஆனால், அப்பெண் அவ்வாறு செய்து, தானும் பழிச் சொல்லுக்கு ஆளாகி, பெற்றோர்களையும் பிறர் பழிப்புக்கு ஆளாகுமாறு செய்யவில்லை!

அறிவு புகட்டினால் அறிவு! தன் வயதிலும் மிகமிகச் சிறியவளான ஒருத்தியை மணக்கத் துணிந்த காமவெறியனுக்கு அவன் மீண்டும் மாதர் குலத்தை போகப் பொருளாகக் கருதி நடக்காத அளவிற்கு, புத்தி புகட்டினாள் புத்தி!

அவள் வீரப் பெண் மட்டும் அல்ல—விவேக சிந்தாமணி! வாழ்க! அப்பெண்ணின் நல்லாள்!

அச்சிறுமியை, 'நரக'த்தில் விழாமல் தடுத்து நிறுத்தியது எது? பெண்ணின் பெருமை அறியாத ஒரு காமப்பித்தனின் வலையில் சிக்காது, அச்சிறுமியை காப்பாற்றத் துணை நின்றது எது?

ஆம்! இளமணத் தடை சட்டம்! அருமையான தடை சட்டம். அதை உருவாக்கி, வைதீகர்களின் எதிர்ப்புக் கிடையில், அதை சட்டமாக்கிய அரிவிலாச சாரதாவும், சில நாளைக்கு முன்புதான், இவ்வுலகைவிட்டு மறைந்துவிட்டார். அவரை ஒரு பெண் எனக்கொண்டு, அவரைப் பேதையர் பலர் பழித்துக்கூறினர்! சங்கராச்சாரிகள் சாபமிட்டனர்! காலஞ் சென்ற சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள்கூட, மறைந்த சாரதா மீது வசை பொழிந்தார்.

இவ்வளவு எதிர்ப்பிருந்தும், சாரதாவின் 'இள மணத் தடைச் சட்டம்' சட்டமாகிவிட்டது! அரிவிலாச சாரதா மறைந்தார்—இருந்தாலும் ஆமதாபாத் சிறுமிக்கு, தான் இயற்றிய சட்டத்தின் மூலம் அருந்துணை புரிந்திருக்கிறார்! வாழ்க அவர் நாமம்!

பசிபிக் கடலுக்குள் மலைத் தொடர்

ரஷ்ய விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

வடமேற்கு பசிபிக் கடலின் அடியில் ஒரு பெரும் மலைத் தொடர் இருப்பதாக சோவியத் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனராம். இந்த மலைத் தொடர் பற்றி இதற்கு முன் எதுவும் தெரியாதாம்.

கடலுக்குள் உள்ள பொருள்களின் ஆராய்ச்சியில் சோவியத் விஞ்ஞானிகள் புதிய அனுபவங்களைப் பெற்றிருப்பதுடன், ஆராய்ச்சிகளுக்கு புதிய முறை கருவிகளையும் உபயோகித்து வருகின்றனராம்.

கோட்டைக்குள் இருந்ததாம்!

ரூ. 40 கோடி பெறுமான தங்கம்

இரண்டாவது உலகப் போர் நடைபெறும்போது இந்திய சர்க்கார் தன் வசமிருந்த தங்க உலோகத்தின் கையிருப்பை அலகாபாத்திலுள்ள முகலாயர்கள் கோட்டையில் பத்திரமாக வைத்திருந்தார்களாம்.

இந்தச் செய்தியை இந்திய சர்க்கார் நிதி அமைச்சர் தேஷ்முக் கூறியுள்ளார்.

இந்த அலகாபாத் கோட்டை, முகலாயச் சக்கரவர்த்திகள் காலத்திலும், பிரிட்டிஷாரின் ஆட்சிக் காலத்திலும் யாரும் உள்ளே புக முடியாத பெரியதொரு பொக்கிஷமாக இருந்துவந்ததாகும்.

1942-ம் ஆண்டில், தேஷ்முக் இந்திய ரிசர்வ் பாங்கியின் கவர்னராக இருந்தார். பாங்கியின் தங்கக் கையிருப்பை பம்பாயில் வைத்திருக்காமல், அலகாபாத்திலுள்ள கோட்டையில் வைத்திருந்தார்களாம். பம்பாய் விமானத் தாக்குதலுக்கும், கடற்படைத் தாக்குதலுக்கும் உள்ளாகலாம் என்ற நிலைமையிருந்ததால்தான் ரூ. 40 கோடி பெறுமான தங்கத்தை அலகாபாத்தில் பாதுகாத்து வைத்திருந்தார்களாம்.

பர்மாவின் முன்னாள் அமைச்சர்கள்

ஜாமீன் கோருகிறார்கள்!

சர்க்காரைக் கவிழ்க்க சதி செய்தார்கள் என்று குற்றம் சாட்டப்பட்ட பர்மிய முன்னாள் அமைச்சர்களான யு-பா-பி, யு-தாவொடி மாங் ஆகிய இருவரும் தங்களை ஜாமீனில் விடுவிக்கக் கோரி மாவட்ட நீதிபதி முன்பு மனு செய்துகொண்டுள்ளனர்.

இவர்கள் இருவராலும் நடக்க முடியவில்லை என்பதால் இவர்கள் 'ஸ்ட்ரெச்சரில்' நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டனர். ஜாமீன் மனுவை விசாரணை செய்த நீதிபதி தீர்ப்புக் கூறுவதை பிப். 8-ந் தேதிக்கு ஒத்திவைத்தார்.

பார்மோசா நெருக்கடி: ஐ. நா.-வுக்கு சீனாவின் விளக்கம்

லண்டன், பிப் 3—

பார்மோசா தீவு போர் நிறுத்தம் பற்றிய நியூசிலாந்தின் பிரரேபணை மீது, ஐ. நா. பாதுகாப்புக் குழு நடத்தும் விவாதத்தில் கலந்து கொள்ளும்படி சீனாவுக்கு ஐ. நா. சபை விட்டிருந்த அழைப்பை சீனா நிராகரித்து விட்டதாக செய்திகள் அறிவிக்கின்றன.

சீனாவின் மீது அமெரிக்கா தனது ஆக்கிரமிப்பை நடத்திற்று என்று கூறும் சோவியத் ரஷ்யாவின் தீர்மானத்தில்மட்டும் சீனா தனது பிரதிநிதியை அனுப்புமென்றும், அதுவும், பாதுகாப்புக் குழுவிலிருந்து சியாங் சர்க்காரின் பிரதிநிதியை துரத்திவிட்ட பின்னர்தான் கலந்துகொள்ளுமென்றும் சீனா அறிவித்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

இதுபற்றி, செஞ்சீனப் பிரதமர் சௌ-என்-லாய், ஐ. நா. சபை பொதுக் காரியதரிசி ஹாமர்ஸ்க் ஜோயெல்டுக்கு அனுப்பிய பதில் ஒன்றில், 'நியூசிலாந்து கொண்டு வந்துள்ள தீர்மானம், சீனாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாக இருக்கிறது; அது ஐ. நா. சாசனத்துக்கு மாறுபட்டு அமெரிக்கா செய்த ஆக்கிரமிப்புக்களை மறைப்பதாக உள்ளது' என்று குறிப்பிட்டுவிட்டு, ரஷ்யாவின் தீர்மானத்தைத் தாம் முழு மனதுடன் ஆதரிப்பதாகவும் எழுதியிருக்கிறார்.

"பார்மோசா, சீனாவினின்றும் பிரிக்கப்பட முடியாத ஒரு பிரதேசம்; அதனை விடுவிக்க சீனா எடுத்துக் கொள்ளுகின்ற எந்த நடவடிக்கையும் அதனுடைய உள்நாட்டு விவகாரம் சம்மந்தமானதே ய லாமல், சர்வதேச நெருக்கடியையோ, சமாதானத்திற்குப் பங்கம் விளைவிப்பதாகவோ இருக்காது என்றும் கூறப்பட்டிருக்கிறது.

மேலும், 'பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம்' என்னும் ஒன்றை அமெரிக்கா பார்மோசாவுடன் ஏற்படுத்திக்கொண்டு, பார்மோசாவுக்கு ஏராளமான துருப்புக்களை அனுப்பியதோடு, போர் ஆரம்பிக்கப் போவதாகப் பயமுறுத்தி வருதாகவும், இதனால் தூரக் கிழக்கு நாடுகளில் நெருக்கடி நிலைமைகள் வளர்ந்து வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

கடந்த 1950-ம் ஆண்டில் அமெரிக்கா பார்மோசாவுக்கு வந்தது முதல், சீனாவுக்கெதிராக நடைபெற்ற அமெரிக்க ஆக்கிரமிப்புகளுக்குத் தடை விதிக்கவேண்டுமென்று ஐ. நா.-வை அடிக்கடி கேட்டும், ஐ. நா. அதற்குச் செவி சாய்க்காமல் மக்கள் சீனாவை அவமானம் செய்ததென்றும், 60 கோடி மக்களைக் கொண்டுள்ள மக்கள் சீனாவுக்கு ஐ. நா. பொதுச்சபையில் இடமில்லாதபோது துரோகிக் கூட்டமான சியாங்குக்கு அங்கே சீனப் பிரதிநிதியாக அங்கீகாரம் அளித்திருப்பது பொறுக்க முடியாத ஒன்றாகும் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறதாம்.

பார்மோசா போர் நிறுத்தத்திற்கான பேச்சுவார்த்தைகள் நடத்த, ஐ. நா. பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் செஞ்சீனா கலந்துகொள்ள மறுத்திருப்பது, லண்டனில் தற்போது இருக்கும் 'காமன் வெல்த்' பிரதமர்களிடையே பெரும் ஏமாற்றத்தைத் தந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

நகரசபை கூட்டத்தில் கூச்சலும் குழப்பமும்

சொந்த ஏமாற்றம் சபைக்கு ஏற்பட்ட அவமரியாதையா?

உறுப்பினர்களிடையே காரசாரமான பேச்சு

பாலக்காடு, பிப். 4—

நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்ட. மூன்று விஷயங்கள் குறித்து விவாதிக்கக்கூடிய நகரசபையில், சபைக் கூட்டத்திற்குத் தேவையான உறுப்பினர்கள் 'சோரம்' இல்லாது போகவே, குழப்பமும், கூச்சலும் மிகுந்து, சபைத் தலைவர் கூட்டத்தை ஒத்திவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகச் செய்தி வெளி வந்துள்ளது

பாலக்காடு கால் பந்தாட்ட பந்தயக் குழுவினரால் நடைபெற்று வரும் பந்தயங்களை தொடர்ந்து பிப்ரவரி 15-ந் தேதிவரை கோட்டை மைதானத்திலேயே நடத்துவதற்கு அனுமதி கோரி வந்த மனு ஒன்றும், ஈ. எஸ் எம் அனீப் என்ற நகரசபை உறுப்பினர் அதே மைதானத்தில் வேறு ஒரு விளையாட்டுப் பந்தயம் நடத்துவதற்கு அனுமதி வேண்டுமெனக் கோரி அனுப்பிய மனுவும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாம்.

பாலக்காடு கால் பந்தாட்ட பந்தயக் குழுவில், பந்தயங்கள் ஒழுங்காய் நடைபெறுகிறதா' என்று கண்காணிக்குமுகத்தான், தானும் அங்கத்தினராக முயற்சித்ததாயும், ஆனால், குழுவிற்குத் தேவையான 500 உறுப்பினர்கள் ஏற்கனவே சேர்ந்துவிட்டதால், தனக்கு இடம் அன்று மறுக்கப்பட்டதாயும், நகரசபையும் அதிகாரபூர்வமாக குழுவில் இடம் பெறவில்லையென்றும், பந்தயக் குழு நகரசபையை மதிக்கவில்லை என்றும், எனவே, அக்குழுவினர் மைதானத்தில் பந்தயங்கள் நடத்த அனுமதிக்கக் கூடாதென்றும் தோழர் அனீப் கூறியிருக்கிறார்.

இதைத் தொடர்ந்து பல அங்கத்தினர்களும் பேசியிருக்கின்றனர். ஒருவர், 'தோழர் அனீபிற்கு இடந்தர மறுத்தவர் யார்?' என்று கேட்டதற்கு, அதைத் தனியாக ரகசியமாகக் கூறுவதாக அனீப் அறிவித்தாராம்.

மற்றொரு அங்கத்தினர், 'நகரசபையை பந்தயக் குழுவினர் எந்த வகையில் மரியாதைக் குறைவாக நடத்தினர் என்று நிரூபிக்க முடியுமா?' என்று கேட்டாராம்.

இந்த நேரத்தில் பல உறுப்பினர்கள் ஏககாலத்தில் எழுந்து பேச ஆரம்பிக்கவே சபை நடவடிக்கைகளைக் கவனிக்க முடியாது குழப்பமும், கூச்சலும் அதிகரித்ததாம்.

கே. பட்டு என்ற 'அரிசன' உறுப்பினர் நகரசபை 'சந்தைக் கடை' போலக் காட்சி தருவதாகக் கூறியிருக்கிறார்.

'நகரசபை உறுப்பினர்களே ஒழுங்காகவும், கண்ணியத்துடனும் நடந்துகொள்ள முன்வராதபோது, கால் பந்தாட்டக் குழுவினர் சபைக்கு மரியாதை தருவார்கள் என்று எப்படி எதிர்பார்ப்பது?' என்று சபையின் துணைத் தலைவர், டி என். அண்ணாதுரை அய்யர் கூறியிருக்கிறார்.

இந்த நிலையில், கால் பந்தாட்டக் குழுவினருக்கு, மைதானத்தைத் தொடர்ந்து உபயோகித்துக் கொள்ள அனுமதி சபைத் தலைவரால் தரப்பட்டுவிட்டதென அறிவிக்கப்பட்டதாம்.

சபையில் அப்போதுகூட தேவையான அங்கத்தினர்கள் இல்லாததால், சபைக் கூட்டம் கலைக்கப்பட்டதாம்.

பல அங்கத்தினர்கள் சபைக்கு வெளியே வராந்தாவில் உலவிக் கொண்டிருந்தனராம்.

1954 செப்டம்பர் மாதத்துடன் முடிந்த முதல் இரண்டு ஆண்டு காலத்தில், சமூக அபிவிருத்தித் திட்டங்களுக்காகவும், 'தேசீய விஸ்தரிப்பு சர்வீஸ்' தொகுதிகளுக்காகவும் மொத்தம் செலவிடப்பட்ட சுமார் 15 கோடி ரூபாயில், பொதுமக்கள், ரொக்கமாகவும், உழைப்பு மூலமும், பொருளாகவும் கொடுத்தது மூன்றில் ஒரு பங்காகும்.

ஆறு நகர சபை உறுப்பினர்கள் வெளியேறினர்

தங்கள் தீர்மானம் நிராகரிக்கப்பட்டதே காரணமாம்

சோப்தொழிலாளர்வேலைநிறுத்தம்: போலீஸ் தலையிட்டதின் எதிரொலி

கோழிக்கோடு, பிப். 4—

உள்ளூரில் உள்ள சோப் பாக்டரி ஒன்றில் நடைபெற்ற வேலைநிறுத்தத்தில் போலீசார் தலையிட்டதை எதிர்த்து, நகர சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை தலைவர் பி. கோவிந்த மேனன், நிராகரித்ததை ஆட்சேபிக்கும் வகையில் சுகாதாரக் குழுவில் இடம் பெற்றிருந்த ஆறு நகரசபை உறுப்பினர்கள் வெளியேறினர் என்று தெரிகிறது.

தொழிற்சாலை முன்பு ஆர்ப்பாட்டம் நடத்திய இரு தொழிலாளர்களைப் பலவந்தமாக வெளியேற்றியதாகவும், பலரைக் கைதுசெய்ததாகவும் கூறப்படுகிறது.

"மாவட்ட அதிகாரிகள் உடனடித் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்," என்று, தீர்மானம் கோருகிறது.

தீர்மானத்திற்குப் போதுமான அவகாசம் தரப்படவில்லை என்றும், அவசரத் தீர்மானங்கள், அனுதாபம் தெரிவிக்க மட்டுமே கொண்டுவரப்பட முடியும் என்றும் கூறி தலைவர் தீர்மானத்தை நிராகரித்திருக்கிறார்.

அதை எதிர்த்து வெளியேறிய நகர சபை உறுப்பினர்கள், சில நிமிடங்கள் கழித்து மீண்டும் சபைக்கு வந்து நடவடிக்கைகளில் கலந்துகொண்டதாகத் தெரிகிறது.

நெல் விலை இறக்கம்

விவசாயிகள் ஏக்கம்

பாபநாசம், பிப். 4—

கடந்த ஒரு வார காலமாக பாபநாசத்தில் நெல் விலை வர வர குறைந்துகொண்டே வருகிறதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த ஒரு வார இடைக் காலத்தில் மூட்டை நெல் ரூ. 13½ ஆக இருந்தது. ரூ. 10½ ஆகக் குறைந்துவிட்டது ; இந்த வாரம் அறுவடையின் இறுதிக் கட்டத்தை அடைந்திருக்கிறது.

இந்த நிலையில், அங்குள்ள ஏழை விவசாயிகளைக் கடன் கொடுத்தவர்கள் நெருக்குவதாகவும், நெல் வியாபாரிகளோ, நெல் மூட்டை 10 ரூபாயாகுமென்று விவசாயிகளிடம் கூறி வருவதாகவும், இந்தக் குறைந்த விலையில் தங்கள் கடன் தொல்லைகளைத் தீர்க்க விவசாயிகள் தமது நெல்லைக் கொடுக்க மனமில்லாமல் இருந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

இரவும் பகலுமாக இரயில் வண்டி நிலயத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கும் நெல் வண்டிகள் தற்போது அடியோடு நின்றுவிட்டிருப்பது அதிசயிக்கத்தக்கதாக இருக்கிறதாம்.

விவசாயிகளுக்கு இது ஒரு நெருக்கடியான நிலைமையாதலால், அரசாங்கம் இது விஷயத்தில் தலையிட்டு ஒரு நியாயமான விலையை நிர்ணயிக்குமா என்று விவசாயிகளனைவரும் ஏங்குகின்றனர்.

★

குடவாசலிலும் குறைவு!

இங்கு, மூட்டை ரூ. 11½ ஆக விற்பனை செய்யப்பட்ட கட்டைச் சம்பா நெல், இப்போது ரூ. 10 - ஆகக் குறைந்துவிட்டது. இந்த விலையில் கூட, ஆலைகளும், தரகர்களும் கொள்முதல் செய்யத் தயக்கம் காட்டுகின்றனர். ஆனால் விவசாயிகளோ இன்னும் விலை குறைந்துவிடுமோ என்று ஏங்குகிறார்கள்.

★

மேலும் தொடருகிறது!

நன்னிலத்திலும், சுற்றுப்புறங்களிலுமுள்ள இடங்களில், விலை ரூ. 12 ஆக இருந்த சம்பா நெல், மூட்டை ரூ. 10-ஆகக் குறைந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. இந்த விலை குறைவிலும், தரகர்களும் வியாபாரிகளும் நெல் கொள்முதல் செய்ய தயங்குகிறார்கள்—இன்னும் விலை குறையும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

இன்னும் விலை குறைந்துவிடுமோ என்ற பயம் மற்றோர் புறத்திலுள்ள விவசாயிகளிடையே நிலவி வருகிறது.

துப்பாக்கிப்பிரயோகத்தில் மாண்டவர் குடும்பம்

பொருளுதவி செய்ய பட்டம் சர்க்கார் ஆலோசனை

திருவனந்தபுரம், பிப். 4—

சென்ற ஆகஸ்டு மாதம் திரு-கொச்சி போலீசார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் மாண்டுபோன மக்களின் குடும்பத்திற்கு பொருளாதார உதவி செய்வது பற்றி சர்க்கார் யோசித்துவருவதாக பட்டம் தாணுப்பிள்ளை சட்டசபையில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஜினிவா ஒப்பந்தம் அமுலாகிறது

கம்போடியாவில் பொதுத் தேர்தல்

கடந்த 1953-ம் ஆண்டு நவம்பரில் சுதந்திரம் பெற்ற பிறகு முதல் முறையாக, இந்தோ-சீனத்தைச் சேர்ந்த கம்போடியா நாட்டில் பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கிறது.

வரும் எப்ரல் 17-ந் தேதியன்று தேர்தல் துவங்குகிறது.

கம்போடியா மன்னர், தேர்தலை ஒழுங்காக நடத்தவும் மேற்பார்வையிடவும் ஒரு காபந்து சர்க்காரை தேர்ந்தெடுத்துள்ளதாயும், மன்னர் தேசீய சட்டசபையில் அறிவித்திருக்கிறார்.

மூன்றுண்டுகளுக்குப் பிறகு இப்போது தேர்தல் நடைபெறுகிறது.

கடந்த 1954 ஜூலையில், ஜினிவா ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு இந்தோ—சீன நாடுகளான லாவோஸ், கம்போடியா ஆகிய இரண்டும், பொதுத் தேர்தலை 1955-ல் நடத்துவது என்று முடிவு செய்திருந்தன. அந்த முடிவு மாநாட்டிலேயே வெளியிடப்பட்டது.

1952-ம் வருட முதல் பிரகடனப்படுத்தப்பட்ட அவசர காலமான கடந்த மூன்றுண்டுகளில் தனது கொள்கைகளை மக்கள் ஆதரிக்கிறார்களா என்பதை மன்னர் தேர்தலுக்கு முன்னால், பிப்ரவரி 7-ந் தேதியன்று ஒரு வாக்கெடுப்பு நடத்துவார் என்றும் மன்னர் அறிவித்திருக்கிறார்.

ரஷ்ய இராணுவச் செலவு அதிகரிக்கிறது

பாராளுமன்றத்தில் வரவு-செலவு திட்டம்

இப்போது சோவியத் பாராளுமன்றத்தில் வைக்கப்பட்டிருக்கும் 1955-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில், பாதுகாப்பு இலாகாவிற்கான செலவு அதிகமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

1954-ம் ஆண்டில் 1,00,300 மில்லியன் ரூபிள்களும், 1955-ல் 1,12,200 ரூபிள்களும் இராணுவத்திற்கென செலவு செய்யப்படுகிறது.

இந்த ஆண்டில் அதிகமாக 1,800 ரூபிள்கள் செலவு செய்யப்படுகின்றன.

1953-ம் ஆண்டில் சோவியத்தின் இராணுவச் செலவு குறைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

கிரெம்லின் மாளிகையில் நடைபெறும் சோவியத் பாராளுமன்றத்தில் நிதி அமைச்சர் அர்சனே செவ்ரோவ், வரவு-செலவுத் திட்டத்தை முன்மொழிந்தார் ; 1,347 உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர். இது சோவியத்தின் இரண்டு பாராளுமன்றங்களும் அடங்கிய கூட்டுக் கூட்டமாகும்.

இராணுவத்தைத் தவிர மற்றச் செலவுகளுக்கு 3,35,300 மில்லியன்கள் செலவிடப்படுமாம். தேசீயச் செலவான இதற்கு 1954-ம் ஆண்டில், 3,26,700 மில்லியன் ரூபிள்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இராணுவச் செலவு பற்றி குறிப்பிட்டு பேசுகையில் சோவியத் நிதி அமைச்சர், "உலக அரங்கில் நமது பணி சமாதானத்தைப் பாதுகாப்பதுதான்," என்று கூறினார். "நமது நாட்டின் பாதுகாப்பு ஏற்பாடுகளின் திறமையைக்குறைத்துக் கொள்ளும் அளவுக்கு எந்த விதமான மாறுதலும் ஏற்படவில்லை," என்று அவர் மேலும் கூறினார்.

ஈராக் நாட்டிற்கு இந்தியத் துணி

இந்தியத் துணிகளின் ரகமும் தரமும் நிரம்பவும் சிறந்ததாய் இருந்தால், ஈராக் நாட்டில் அவைகள் விற்பனையாவதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன என்று இந்தியத் துணிகளின் கவுன்சில் கருதுகிறதாம்.

இந்தியத் துணிகள்மீது இங்கு கூறப்படும் குறையெல்லாம், ரகங்கள் மிகக் குறைவாயிருக்கின்றன ; மேலும், விலை அதிகமாயிருக்கிறது என்பதும் ஒரு காரணமாகும்.

ஜப்பான்காரர்களைப்போல இந்திய ஆலை அதிபர்களும், பாக்தாத் மார்க்கெட்டின் தேவையை உணர்ந்து, அதற்கொப்ப நல்ல ரகங்களைத் தாயாரித்தால் ஏராளமான இந்தியத் துணிகளை அங்கு விற்க முடியும் என்று கூறப்படுகிறது.

ஜப்பான் துணி, இங்கிலாந்துத் துணி ஆகியவற்றின் மாதிரிகளைப் பார்வையிட்டு அவைபோல துணி தயாரிக்க இந்திய முதலாளிகள் முன்வரவேண்டுமோம்.

சமூக நலத் திட்டங்களும் தேசிய விஸ்தரிப்புத் திட்டங்களும் ஆரம்பித்து இரண்டு ஆண்டு முடிவதற்குள்—அதாவது, 1954 அக்டோபர் வரை—சுமார் 1,29,000 ஏக்கரா நிலம் திருத்திப் பண்படுத்தப்பட்டிருக்கிறது ; சுமார் 4,00,000 ஏக்கரா நிலத்துக்குப் பாசன வசதி அளிக்கப்பட்டிருக்கிறது.

கர்நாடக தி. மு. கழக முதலாவது சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள்

★

பெங்களூர் கண்டோன்மெண்ட் பிளாக்பள்ளி மைதானத்தில், மஜீத் பந்தலில் கைலாசம் அரங்கில் நடைபெறும்

12—2—55 சனி:	13—2—55 ஞாயிறு:
சமூக சீர்திருத்த மாநாடு	அரசியல் மாநாடு
தலைவர் : காஞ்சி கல்யாணசுந்தரம்	தலைவர் : என். வி. நடராசன்
திறப்பாளர் : ப. உ. சண்முகம்.	திறப்பாளர் : தோழியர் அருண்மொழி

இரண்டு நாட்களிலும் பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன், ஈ. வெ. கி. சம்பத், மு. கருணாநிதி, க. அன்பழகன், சி. பி. சிற்றரசு, அ. பொன்னம்பலனார், எம். ஜி. இராமச்சந்திரன், எஸ். எஸ். இராசேந்திரன் மற்றும் கழக முன்னணி வீரர்களும் கலந்துகொள்வர்

★

இசைமுரசு நாகூர் அனீபா குழுவினரின் இசை விருந்து உண்டு

மாநாட்டுக் கட்டணம் (இரண்டு நாட்களுக்கும்) :

வரவேற்பாளர் ரூ. 3, பிரதிநிதி ரூ. 2, பார்வையாளர் ரூ. 1, பெண்கள் அணா 8

வ. கு. தலைவர்கள் :	செயலாளர்கள் :	பொருளாளர் :
எஸ். ஜே. உசேன், எஸ். வி. பதி	ஏ. டி. பிரான்சிஸ், செ. விழியன்	எம். ஆர். பெருமான்

விளம்பரக் குழு: கி. சோழன், வெங்கடசாமி தொ. ப. தலைவர்: ஆர். ராகவன் துணை: சு. கண்ணன்

திருமலை தேசீய மயமாகிறது!

பிற மதத்தினர் செல்லும் தடை ஒழிந்தது

திருப்பதி, பிப். 3—

திருமலைக்கு இந்துக்கள் அல்லாதோர் செல்லக் கூடாது என்றிருந்த உத்தரவு மாற்றப்பட்டு இப்போது, இந்துக்கள் அல்லாதோரும் திருமலைக்குச் செல்வதில் ஆட்சேபமோ தடையோ இல்லையென்றும், ஆனால் அவர்கள், திருமலை ஆலயத்தில் நுழையவோ கூடாதென்றும், ஆந்திர சர்க்கார் தேவஸ்தான அதிகாரிகளுக்கு தந்தி மூலம் புதிய உத்திரவு ஒன்றை அனுப்பி உள்ளனர் என்று தெரிகிறது.

ஆலய நுழைவுச் சட்டம் வரும் வரையில், திருமலையில், தாழ்த்தப்பட்ட மக்கள் கூட அனுமதிக்கப்படுவதில்லை; ஆனாலும் வெள்ளைக்கார அதிகாரிகள் மட்டும் அனுமதிக்கப்பட்டு வந்தனராம்.

அதிகாரியாக இல்லாத இந்துக்களல்லாதார்களுக்கு இப்போது தான் முதன் முறையாக திருமலைக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

திருமதி ருக்மணி அருண்டேல் எம். பி. தனது செயலாளரான பீட்டர் ஹாப்மன் என்பவரையும், திருமலைக்குச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்று கோரியதின் பேரிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

மாணவர்கள் மீது தடியடிப் பிரயோகம்

400 பேர் கைதாயினராம்

மோதிகாரி, பிப். 3—

பெத்தய்யா என்னுமிடத்தில் உள்ள பள்ளியில் சரசுவதி பூசை செய்யவேண்டுமென்று மாணவர்கள் விரும்பினர்களாம். இப்பள்ளி கிறித்துவ மிஷனால் நடத்தப்படுகிறது. பூசை செய்ய மாணவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதாம். இதனால் மாணவர்கள் கலவரம் விளைவித்தனராம்.

நிலைமையைச் சமாளிக்கப் போலீசார் மாணவர்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்தனர் என்றும், சுமார் 200 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிகிறது. நகரில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதாம். இத்தடையை மீறியதற்காகவே மாணவர்கள் பலர் கைது செய்யப்பட்டனராம். பள்ளிப் பகுதிக்குள் நுழையக்கூடாது என்று தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் போக்கை எதிர்த்து மாவட்டத் தலைமை நகரமான மோதிகாரியில் பூரண ஹர்த்தால் நடைபெற்றதாம். கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்றும், தடியடிப் பிரயோகம் பற்றி விசாரணை நடத்த வேண்டுமென்றும் கோரப்பட்டிருக்கிறது.

பீகார் ஜன சங்க பொதுச் செயலாளர் லோவ்ஷ்கானந்த் ஜா என்பவர் 400 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், அவர்களில் சுமார் 80 பேர் 10 வயதுக்குட்பட்ட மாணவர்கள் என்றும் கூறியுள்ளார்.

ஆந்திர தேர்தல்

50,000 பேர் தபால் மூலம் வாக்களிப்பர்

ஆந்திராவில் உள்ள மொத்தம் 1,20,00,000 வாக்காளர்களில் சுமார் 50,000 வாக்காளர்கள் தங்கள் வாக்குகளைத் தபால் மூலம் பதிவு செய்வர் என்று கூறப்படுகிறது.

தேர்தல் தலைமை நிலையம் இதற்கான தபால் வாக்குச் சீட்டுகளை சம்பந்தப்பட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு ஏற்கனவே அனுப்பி விட்டதாம்.

எம். எல். ஏ. வீட்டில் கொள்ளை

பாளையங்கோட்டையிலிருக்கும் ஏ. டி. ஆதித்தன் எம். எல். ஏ.,-யின் வீட்டிற்குள் புகுந்து அவரது சொந்தக்காரர் ஒருவருக்குரிய நகை, ரொக்கப்பணம் ஆக ரூ 400 கொள்ளையிடப்பட்டதாகத் தெரிகிறது.

ஆதித்தன் ஊரில் இல்லை. தவசிமுத்து நாடார் என்ற அவரது உறவினர் அவர் வீட்டில் தங்கியிருந்தாராம். வீட்டிலுள்ளோரும், அந்த உறவினரும் ஏதோ காட்சி பார்க்கச் சென்றிருந்த நேரத்தில் திருட்டு நடைபெற்றிருக்கிறது என்று தெரிகிறது.

கம்யூனிஸ்டு தலைவர் கைது

அனந்தப்பூர், பிப். 4—

ஆந்திர கம்யூனிஸ்டு தலைவரான நாகி ரெட்டியும், அனந்தப்பூர் நகர சபை உறுப்பினரான கோபால கிருஷ்ணா என்பவரும், போலீஸ் அனுமதி இன்றி கூட்டம் நடத்த முயன்றதாகக் கைது செய்யப்பட்டனர் என்று செய்தி வெளியாகியுள்ளது.

பின்னர் இருவரும் ஜாமீனில் வெளிவிடப்பட்டிருக்கின்றனர்.

தோழர் நாகி ரெட்டி, ஆந்திர தேர்தலில் புட்சொர் தொகுதியிலிருந்து போட்டியிடுகிறார்.

சிதம்பரநாதருக்கு ...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

குக் கிடைக்கும் பெருமையையும் குறிப்பிட்டுப் பாராட்டிப் பேசினார்கள்.

பின்னர் ஆசிரியத் தோழர்கள் அ. சுப்பையா, மெ. சுந்தரம் ஆகியோரும் அவரது மொழிநூல் புலமை குறித்தும் ஏனைய சிறப்புக் குறித்தும் பாராட்டுதல் தெரிவித்துச் சொற்பொழிவாற்றினர்.

தமக்களிக்கப்பட்ட வாழ்த்துகளுக்கும் பாராட்டுகளுக்கும் நன்றி தெரிவித்துப் பேசுகையில் டாக்டர் சிதம்பரனார் அவர்கள் மாணவர் காட்டிய பேரன்பு குறித்துத் தாம் பெருமகிழ்ச்சி கொள்வதாகவும், மேலை நாட்டில் தமிழின் சிறப்பு உயர தம்மாலியன்ற அளவு பணி 'செய்வதாகவும் வாக்குறுதி அளித்தார்.

இறுதியாகத் தலைமை வகித்த டாக்டர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தானும் ஒரு தமிழன்தான் என்றும், டாக்டர் சிதம்பரனார் அவர்கள் தமிழர் பிரதிநிதியாக லண்டன் செல்வது பெரிதும் பொருத்தமுடையதே என்றும், தமக்குத் தெரிந்த வரையில் தமிழ்மொழி மேலை நாடுகளில் 10 இடங்களில் வழங்கப்பட்டு வருவதாகவும், ஆனால் இந்தி மொழியோ வடநாட்டின் ஒரு சிறு பகுதியிலே தான் பேசப்பட்டு வருகிறதென்றும் டாக்டர் சிதம்பரனாரின் லண்டன் பயணம் தமிழ் மொழிக்கு உயர்வு தேடித் தருவது ஒன்றுகும் என்றும் குறிப்பிட்டார்.

தோழர் சி. வெள்ளையன் அனைவருக்கும் நன்றி கூறினர்.

ஃ ஃ ஃ

23—1—55 அன்று இரவு சிதம்பரம் புகைவண்டி நிலையத்தில், டாக்டர் சிதம்பரனார் அவர்களை அறுநூறுக்கு மேற்பட்ட மாணவர்களும், ஆசிரியர்களும் கூடியிருந்து மாலைகள் அணிவித்து வழியனுப்பி வைத்தனர்

கல்வி சம்பந்தமான புதிய துறைகளில் சேவை செய்துவரும் 'இஷ்டபூர்வ சேவா ஸ்தாபனங்'களுக்கு நிதி உதவி அளித்து வருவதற்கான திட்டத்தின் கீழ், மத்திய சர்க்கார் கல்வி மந்திரி காரியாலயம், இதுவரை 40 நிறுவனங்களுக்கு பண உதவி செய்துள்ளது.

கொடுமை செய்யாதே!

போர்ச்சுக்கலுக்கு இந்தியா எச்சரிக்கை

"கோவா மக்களை மேலும் அதிக அடக்குமுறைகளுக்கு ஆளாக்கினால், கோவா மக்களுக்கும் இந்திய மக்களுக்கும் ஆத்திரம்தான் இனி அதிகரிக்கும்; இதனால் ஏற்படுகின்ற விளைவுகள் ஒவ்வொன்றிற்கும் போர்ச்சுகல் சர்க்காரே பொறுப்பாகும்,"

இவ்வாறு, இந்திய சர்க்கார் போர்ச்சுகல் சர்க்காரை எச்சரித்திருக்கிறது.

"போர்ச்சுகீசிய சர்க்கார் ஏற்படுத்திய புதிய சட்டங்களின்படி, கோவானியர் உட்பட இந்திய சத்தியாக்கிரகிகளைக் கைது செய்து சிறைவாசத்திற்காக போர்ச்சுகலுக்கோ, அல்லது ஆப்பிரிக்காவிலுள்ள போர்ச்சுகீசிய காலனிகளுக்கோ அனுப்புவதாயிருந்தால் இந்தியாவில் நிச்சயமாகப் படுமோசமான நிலைகள் உருவாகிவிடும்"

என்றும் அவ்வெச்சரிக்கைக் குறிப்பில் காணப்படுகிறது.

இந்தியத் துணைக்கண்டத்தில் அடுத்தடுத்து ஏற்பட்டுவரும் சரித்திர மாறுதல்களையும், பிரிட்டன், பிரெஞ்சு, போர்ச்சுகீசிய காலனி ஆட்சி எதுவாக இருந்தாலும் அந்த ஆட்சியை அடியோடு கருவறுக்க இந்திய மக்கள் கொண்டுள்ள ஆர்வத்தையும் புரிந்து கொள்ளும்படி போர்ச்சுகல் சர்க்காரை இந்திய சர்க்கார் கேட்டுக் கொண்டுள்ளது.

விருதுநகர் நகரசபை

எம். எஸ். பி. ராஜா தலைவராகத் தேர்வு

விருதை, பிப். 3—

நேற்று துணைத் தலைவர் பூ ராஜம்மாள் தலைமையில் நடைபெற்ற நகரசபைக் கூட்டத்தின் போது தலைவராக திரு. எம். எஸ். பி. ராஜா ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திரு எம். எஸ். பெரியசாமி நாடார், தலைவராக இருந்து, சில நாள் முன் காலமானது தெரிந்ததே

புதிய தலைவர், காலமான பெரியசாமி நாடாரின் இரண்டாவது புதல்வராவார்.

விருதை நகர சபைத் தலைவர் பதவி, மூன்றாவது தலைமுறையாக எம். எஸ். பி. செந்திக் குமார நாடார் குடும்பத்தாரிடம் இருந்து வருகிறது.

28 வயது மட்டுமே நிரம்பப்பெற்ற புதிய தலைவரைப்பாராட்டி துணைத் தலைவர் ராஜாம்பாள், இன்னும் நகர சபை உறுப்பினரான ஏ. வி. பி. ஆசைத்தம்பி, உலகநாதன், உதுமான், ரத்தினம் ஆகியோர் பேசினர்கள்.

திரு-கொச்சி மலையாள...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சபையால் மேற்கொள்ளப்படவேண்டுமென்றும், அங்கு செய்யப்படுகிற சட்டங்களை ஒதுக்கித் தள்ளிவிடுவதாக இருக்கக்கூடும் என்றும், அச்சமூக மக்கள் விரும்புவதாக இருந்தால் பொறுக்குக் குழுவிற்கு பிரஸ்தாப மசோதாவை அனுப்புவதில் தமக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்றும் முதல் மந்திரி கூறினர்.

பொதுவாகக் கடன் பட்டுள்ள விவசாயிகளுக்கும், வர்த்தகர்களுக்கும் நிவாரணம் தரும் ஒரு ஏற்பாடாக கடன் நிவாரண மசோதா இருக்கிறது.

கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினராகச் சேர்க்கப்பட்ட கைத்தறி நெசவாளர்களின் மொத்த எண்ணிக்கை 1954 மார்ச் 31-ந் தேதியன்று 7,65,000 ஆக இருந்தது.

கழகக் கூட்டங்கள்

★

சின்னசேலம்

கோட்டை திடலில்

7—2—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: பெ. சு. விசுவநாதன்

பேசுபவர்:

இரா. நெடுஞ்செழியன்

★

குளித்தலை

7—2—55 மாலை 6 மணிக்கு

தலைவர்:

மீ. சு. இளமுருகு பொற்செல்வி

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்

ஏ. பி. தர்மலிங்கம்

தி. வீ. முத்துகிருஷ்ணன்

★

அக்கரைவட்டம்

தி. மு. கழக திறப்பு விழா

6—2—55 காலை 8 மணிக்கு

பேசுபவர்:

க. அறிவழகன்

★

காரைக்கால்

6—2—55 மாலை 6 மணிக்கு

பேசுபவர்:

க. அறிவழகன்

திராவிடர் திருநாள்

6—2—55 மாலை 5 மணிக்கு, குடியேற்றம் ஆற்றில், ரேடியோ திடலில், பகுத்தறிவு இளைஞர் மன்றச் சார்பில், திராவிடர் திருநாள் பொதுக்கூட்டம் தோழர் ஆ. க. திலகன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் முகவை ஆர். எஸ். பாண்டியன், எஸ். எஸ். தென்னரசு ஆகியோர் பேசுவர்.

தமிழ்த் திருவிழா

6—2—55 மாலை 5 மணிக்கு: சென்னை; சிந்தாதிரிப்பேட்டை, எண் 124, சாமி நாய்க்கன் தெருவில், சென்னை வேதாந்த சங்கத் தமிழ்க் கல்லூரி மாணவர் இலக்கிய மன்றச் சார்பில் தமிழ்த் திருவிழா திரு. அ. ச. ஞானசம்பந்தம் தலைமையில் நடைபெறும். திருமதி பி. பி. இராஜ ராஜேஸ்வரி தமிழ்க் கொடியேற்றுவார். திருவாளர்கள் க. பெருமாள், கு. இராஜவேலு ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

பிரான்மலை அண்ணா மன்றம் முதல் ஆண்டு நிறைவு விழா

7—2—55 மாலை 6 மணிக்கு, பிரான்மலை, தேரடி மைதானத்தில் தோழர் பழ பகலவன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, எஸ். முத்து, ஞா தியாகஅரசு ஆகியோர் பேசுவர்

பொதுக்கூட்டம்

6—2—55 மாலை 6 மணிக்கு, திருச்சி, கள்ளத் தெரு, திரவியம் திடலில், திரு. வி. க. மன்றச் சார்பில் தோழர் எஸ். நெடுமாறன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, செழியன், எம். எஸ். மணி, மதிவாணன் ஆகியோர் பேசுவர்.

சொற் பயிற்சிக் கூட்டங்கள்

6—2—55 காலை 9 மணிக்கு, சென்னை 44-வது வட்ட தி. மு கழகப் பணிமனையில் (எண் 2 அரங்கநாதபுரம் தெரு) தோழர் ஆர். அறிவழகன் தலைமையில் 'சமுதாயம்' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

6—2—55 காலை 10 மணிக்கு, சென்னை, முத்தியாலுப்பேட்டை, எண் 17, சாலை விநாயகர் கோவில் தெரு முத்தமிழ் மன்றத்தில், 'சிந்தனை' என்னும் பொருள் பற்றி தோழர் தம்பி தலைமையில் தோழர்கள் பலர் பேசுவர்.

திருக்குறள் வகுப்பு

6—2—55 காலை 10 மணிக்கு, சென்னை இராசமன்னர் பாடசாலையில், முத்தியாலுப்பேட்டை திருவள்ளுவர் இளைஞர் கழகச் சார்பில் நடைபெறும். தோழர் சி முருகேசனர் விளக்கவுரையாற்றுவார்.

மேலும் 50 பஸ்கள்

சென்னை, பிப். 4—

சர்க்கார் மற்றுமுள்ள காரியாலயங்களில் பணியாற்றும் ஊழியர்கள் போக்குவரத்து நெருக்கடியைத் தவிர்க்க, சென்னை சர்க்கார் மேலும் 50 பெரிய போக்குவரத்து பஸ்களை ரூ. 30 லட்சம் செலவில் வாங்குவதென்று முடிவு செய்துள்ளதாம்.

மேலும், அடிக்கடி கெட்டுப் போய் பழையனவாகிவிட்ட சிறிய பஸ்களுக்குப் பதிலாக 'மீடியம் டைப்' (நடுத்தரமான நீளம்) பஸ்கள் 150 வாங்குவதென்றும் சர்க்கார் திட்டமிட்டுள்ளதாம்.

இந்த பஸ்களை வாங்குவதற்கான முழுத் தொகையையும் சென்னை சர்க்காரின் 1955-56-ம் ஆண்டிற்கான சர்க்கார் வரவு-செலவில் (பட்ஜெட்) ஒதுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெகு விரைவிலேயே, 74 பிரயாணிகளை ஏற்றிச் செல்லக் கூடிய பெரிய அளவுள்ள 200 பஸ்களை நகரில் விடவும் தீர்மானித்துவிட்டிருக்கிறதாம்.

இவ்வாண்டில் ஏற்கனவே 50 பஸ்களுக்கு 'ஆர்டர்' கொடுக்கப்பட்டது. இவற்றுள் 17 பஸ்கள் இப்போது நகரில் ஓடிக்கொண்டிருக்கின்றன.

மூன்றாவது தமிழ் எழுத்தாளர் மாநாடு

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஆதரவில் பிப்ரவரி 12, 13-ந் தேதிகளில், 'மயிலை ரசிக ரஞ்சனி சபா'வில் மூன்றாவது தமிழ் எழுத்தாளர் மாநாடு, கவர்னர் பிரகாசா திறந்து வைக்க, திரு. ம பொ. சிவஞானம் தலைமையில் நடைபெறும் என்றும், திரு எஸ். ஏ. பி. அண்ணாமலை தலைவராகவும், திருவாளர்கள் வேம்பு, சோமசுந்தரம், அப்துல் வகாப், ஆனந்ததீர்த்தன், கே. பி. பாலசுப்ரமணியம் ஆகியோரை செயலாளர்களாகவும் கொண்ட வரவேற்புக் குழு, மாநாட்டிற்கான வேலைகளைச் செய்து வருவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

திருமணங்கள்

7—2—55 காலை 7 மணிக்கு, சென்னை, கோடம்பாக்கம், ஆற்காடு ரோடு, 135-ம் எண்ணுள்ள இல்லத்தில், தோழர் தனபாலன்—தோழியர் பூரணி அம்மை திருமணம் தோழர் கா. அப்பாதுரை தலைமையில் நடைபெறும் தோழர் கண்ணதாசன், தோழியர் அலமேலு அப்பாதுரை ஆகியோர் பேசுவர்.

* * *

7—2—55 காலை 9 மணிக்கு, கடலூர், தேவனாம்பட்டணம், மெயின் ரோடு, 10-ம் எண்ணுள்ள இல்லத்தில், தோழர் மு. சீனுவாசன்—தோழியர் அபரஞ்சி திருமணம் தோழர் ஏ. கோவிந்தசாமி, எம்.எல் ஏ. தலைமையில் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், இரெ. இளம்வழுதி. சித்தார்த்தன்-ஆகியோர் பேசுவர்.

* * *

6—2—55 காலை 5½ மணிக்கு, பெரிய காஞ்சிபுரம், சாலை வீதி, 64-ம் எண்ணுள்ள இல்லத்தில், தோழர் ஆர். ஜானகிராம்—தோழியர் சரோஜா திருமணம் பெரியார் ஈ. வெ. ரா. தலைமையில் நடைபெறும்.

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

பிப். 6: திருப்பூர்

7: பிரான்மலை

12, 13: பெங்களூர் மாநாடு

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என் அண்ணாதுரை, எம்.ஏ.